**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | (PW1) Maruthachalam | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th day of February 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது எனது அண்ணன் திருப்பதி எனக்கு போன் செய்து எனது மகன் கிரனுக்கு அம்மன்கோவில், கைகாட்டி அருகே எனது மகன் ஓட்டிச் சென்ற Hero Passion Pro மோட்டார் சைக்கிள் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது மகன் இறந்திருந்தார். பிறகு நான் சிவகிரி காவல் நிலையம் சென்று விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது),** பிறகு சிவகிரி போலீசார் கொடுமுடி அரசு மருத்துவமனையில் எனது மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள். நான் எனது மகனின் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

**1)** விபத்து நடந்தபோது எனது மகனுக்கு என்ன வயது என்றால் 17. எனது மகனுக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச் சென்ற வாகனம் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமாக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:04:58 +0530

செய்துள்ளேன் என்றால் ஆமாம். நஷ்ட ஈட்டு வழக்கிற்காக முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தவறாக சொல்கிறேன் என்றும், தவறான புகாரைக் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.26 09:05:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | (PW2)Thirupathivenkatesh | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th day of February 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

**1)** நான் தற்போது தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் பெருந்துறையில் இருந்து கரூர் செல்வதற்காக ஈச்சர் வாகனத்தில் சரக்கு ஏற்றிக் கொண்டு சிவகிரிக்கு அருகே இறக்கமாக உள்ள ரோட்டில் நான் வந்து கொாண்டிருந்தபோது எனக்கு எதிர் திசையில் ஒரு லாரி வேகமாக வந்து எனது வண்டியை முந்தி ஒரு இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. இதில் எதிரே வந்த லாரியின் சக்கரம் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் மீது ஏறி இறங்கியது. இதில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து நடந்த ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். நான் மேற்கே இருந்து கிழக்கே வந்தேன் என்றால் சரிதான். லாரி எதிர்திசையில் அவருடைய பாதையில் அவர் வந்துகொண்டிருந்தார், நான் எனது பாதையில் நான் வந்து கொண்டிருந்தேன். எனது வண்டிக்கு பின்புறம் மேற்கிலிருந்து கிழக்கே வந்தது இருசக்கர வாகனம். எனது வண்டியின் இருசக்கர வாகனம் முந்திச் சென்று ரோட்டின் தென்புற பகுதியில் சென்றதால் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தை அப்போதே இரண்டு வண்டிகள்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:05:06 +0530

நின்றதையும், பைக் கீழே கிடந்ததையும், பிரேதத்தையும் பார்த்து போட்டோ எடுத்துக கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்திலேயே என்னிடம் போலீசார் விசாரித்து கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.26 09:05:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:3

| Name | (PW3) Annadurai | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th day of February 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):—**

1) நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து கொண்டு இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி நானும், சசி என்பவரும் இருசக்கர வாகனத்தில் அம்மன்கோவில் சென்று கொண்டிருந்தோம். அப்போது நல்லப்பா மாடர்ன் ரைஸ் மில் அருகே விபத்து ஏற்பட்டு கூட்டமாக இருந்தது. ஒரு பள்ளி மாணவர் இருசக்கர வாகனத்தில் வந்து லாரியில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:—**

கடந்த 29.06.2022ம் தேதி காலை 07.30 மணிக்கு அம்மன் கோவில் கைகாட்டி செல்வதற்காக நானும், எனது நண்பர் சசி என்கிற சக்திவேலும் சென்று கொண்டிருந்தபோது எனக்கு தெரிந்த மருதாச்சலம் என்பவர் மகன் கிரன் TN 42 F 2627 என்ற எண்ணுள்ள Hero Passion Pro என்ற இருசக்கர வாகனத்தில் நல்லப்பா மாடர்ன் ரைஸ் மில் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டிச் சென்றபோது அதே திசையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வந்த TN 33 BU 7490 என்ற லாரியின் ஓட்டுனர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்தை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:05:14 +0530

நானும், எனது நண்பர் சசி என்கிற சக்திவேலும் நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.26 09:05:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 12/2023**
**Prosecution Witness**:4

| Name | (PW4) Sakthivel | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th day of February 2026** by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து கொண்டு பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 29.06.2022ம் தேதி நானும் எனது நண்பர் கவிராஜும் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அம்மன்கோவில் கைகாட்டி அருகே உள்ள நல்லப்பா மாடர்ன் ரைஸ் மில் அருகே கூட்டமாக இருந்தார்கள். அங்கு போலீசார் ஒரு விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரித்து படம் வரைந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும்படி எங்களை கேட்டுக் கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது, போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 எனக்கு பழக்கமானவர். அ.சா.1 கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, சம்பவ இடத்தில் வைத்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:05:21 +0530

கையொப்பம் செய்ததாகவும், என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.26 09:05:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.